# எக் உபதேசத்தின் போது நடைபெறுவது என்ன?

> இரண்டாவது உபதேசம் முக்கியமானது, ஏனென்றால் உட்புற ஆசான் ரகசியக் கோட்பாடுகளை முறைப்படி கொடுக்கத் தொடங்கும் தருணமாகும்.
>
> — ஹெரால்ட் கிளம்ப்

## இரண்டாவது உபதேசம் ஏன் மிகவும் முக்கியமானது?

### உபதேசம் மாற்றத்தை வழங்குகிறது.

மஹாராந்தா, வாழும் எக் சத்குரு உங்களைச் சப்த அலைகளுடன் இணைக்கிறார், உங்கள் சொந்த ரகசிய வார்த்தையை நீங்கள் பெறுகிறீர்கள்.

இந்த வார்த்தை ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஒத்திசைவு செய்ய உங்களுக்கு உதவும் ஒரு முக்கிய திறவுகோலாகும்.

இது இறைவனின் பரிசு. எக் உபதேசங்களுக்கு ஒருபோதும் கட்டணம் இல்லை.

உபதேசம் உங்களை அன்பு, ஞானம் மற்றும் சக்தியின் ஒரு பெரிய நீரோட்டத்திற்குத் திறக்கிறது. இது அதிக ஆன்மீகத் தூய்மையைக் கொண்டுவருகிறது. விழிப்புணர்வையும் அதிகரிக்கிறது.

### வாழ்க்கையை மாற்றக்கூடிய ஆசீர்வாதங்கள் உங்களுக்குக்காகக் காத்திருக்கின்றன.

- நீங்கள் இந்த ஸ்தூல உலக மறுபிறவிகளின் சக்கரத்திலிருந்து விடுவிக்கப்படுகிறீர்கள்.
- மஹாராந்தா, வாழும் எக் சத்குருவால் உங்கள் கர்மா எடுத்துக் கொள்ளப்பட்டு, சமச்சீரான முறையில் கர்மாவைச் சமன் செய்வதற்காக உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. சில சமயங்களில் கனவு நிலையிலும் திருப்பித் தரப்படுகிறது,
- உங்களின் முதல் ஆன்மீக இலக்கான தன்னை-உணர்தலை நோக்கி உயர்நிலை அருளுரைகளையும், சிறப்பான உட்புற மற்றும் வெளிப்புற பயிற்சிகளையும் நீங்கள் பெறுவீர்கள்.

## உபதேசம் எவ்வாறு நிகழ்கிறது?

உங்கள் எக் படிப்பின் முதல் வருடத்தின் போது, முதல் உபதேசத்தை மஹாராந்தா கனவு நிலையில் உட்புறமாக அளிக்கிறார்.

இரண்டாவது உபதேசம் உட்புறம் மற்றும் வெளிப்புறம் என இரண்டிற்குமான சடங்காகும்.

சத்குரு உங்களுக்கு ஒரு அழைப்பிதழை அனுப்புவார்—அது ஒரு இளஞ்சிகப்பு உபதேசச் சீட்டு, நீங்கள் அதை ஒரு எக் உபதேசத்தை வழிநடத்துபவரிடம் வழங்க வேண்டும். நீங்கள் உபதேசத்தை வழிநடத்துபவரை ஒரு தனிப்பட்ட, அமைதியான இடத்தில், சுமார் ஒரு மணி நேரம் சந்திக்கிறீர்கள்,

எப்பொழுதுமே மஹாந்தா தான் எக் உபதேசத்தை வழங்குகிறார். சத்குரு, வெளிப்புற உபதேசங்களுக்கு உதவுவதற்காகத் தனது பணிவான கருவிகளாக எக்கின் உபதேசத்தை வழிநடத்துபவர்களை தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளித்துள்ளார்.

## சடங்கின் போது நடைபெறுவது என்ன?

எளிமை, கருணை மற்றும் அழகு ஆகியவை நிறைந்த இந்தச் சடங்கு புனித ஆன்மீக நிகழ்வாகும். இது உங்களை எக், தூய இறையாற்றலிடம் நெருக்கமாகக் கொண்டு செல்கிறது.

சடங்கின் போது வழிநடத்துபவர் உங்களின் தனிப்பட்ட ரகசிய வார்த்தையை உங்களுக்குத் தருகிறார். இது உங்களின் அதிர்வு அலைகளுடன் பொருந்துகிறது மற்றும் உங்கள் ஆன்மீகக் கண்ணைத் திறக்கச் செய்கிறது.

நீங்கள் ஒரு சிறிய ஆன்மீகப் பயிற்சி செய்வீர்கள். இது நீங்கள் ஏற்கெனவே வீட்டில் செய்து கொண்டிருப்பதைப் போன்று இருக்கும்.

## உட்புறத்தில் நடைபெறுவது என்ன?

உட்புற லோகங்களில் மஹாந்தா ஒரு பிரகாசமான ஜோதி உடலில் வருகிறார். அவர் உங்களை இறைவனின் ஜோதி மற்றும் சப்தத்துடன் இணைக்கிறார், மேலும் இறைவனின் வீட்டிற்குச் செல்லும் பாதையில் உங்களுடைய கால்களை உறுதியாகப் பதிய வைக்கிறார்.

நீங்கள் இருவரும் இறை ஆற்றின் கரையில் அமர்ந்து, அற்புதமான எக்கைப் பற்றி விவாதிக்கலாம்.

உபதேசத்தின் போது நடைபெறும் அனைத்தையும் நீங்கள் அறிந்திருக்கலாம் அல்லது அறியாமலும் இருக்கலாம், என்றபோதிலும், நீங்கள் நிச்சயமாக இறைவனின் ஜோதி மற்றும் சப்தத்தின் பெரிய நிலைக்குள் நுழைவீர்கள்.

உங்களுக்கும், மஹாந்தாவுக்கும் இடையே உள்ள தெய்வீக அன்பின் பந்தத்தை நன்கு புரிந்து கொள்வதற்கு *ஸ்ட்ரேஞ்சர் பை தி ரிவர்* புத்தகத்தைப் படியுங்கள்.

காலப்போக்கில், உங்களது தொடர்ச்சியான விரிவாக்கத்திற்குத் தேவையான அனைத்தையும் நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்வீர்கள்.

## நான் எப்படி வித்தியாசமாக இருப்பேன்?

இரண்டாவது வட்ட உபதேசம் நிலையில் இருப்பவர்கள் அதிகமாகப் பார்க்கிறார்கள், மேலும் அதிகமாகப் புரிந்துகொள்கிறார்கள். உயரப் பறக்கும்

வெப்பக்காற்று பலூனைப் போல, நீங்கள் உயரத்திற்குச் செல்லும் வேளையில், உங்கள் நோக்கம் பெரிதாய் வளர்ச்சியடையும், மேலும் உங்கள் வாழ்க்கையை உங்களால் சிறப்பாக ஒழுங்கமைக்கவும் முடியும்.

எக்கின் உபதேசம் உங்களுக்கு பயம், குற்ற உணர்வு மற்றும் நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றைக் கையாள்வதற்கான கூடுதல் திறனை வழங்குகிறது. அவை இருந்த இடத்தில் பணிவு, அதிக நன்றியுணர்வு கொண்ட இதயம், தைரியம், கண்ணியம் மற்றும் மகிழ்ச்சி ஆகியவை வந்தடைகின்றன.

## நீங்கள் விழிப்படைந்த ஆன்மா.

கனவுகள், நுண்ணறிவு மற்றும் ஆன்மீக வெளிப்பாடுகள் மூலம், உண்மையான வாழ்க்கையின் ரகசியத்தை நோக்கி—மஹாரந்தா உங்களின் ஆன்மீக வாழ்க்கையின் ஒரு புதிய மற்றும் உயர்ந்த நோக்கத்திற்கு உங்களை விழிப்படையச் செய்வார்.

அதிக ஈடுபாடுடன் இறைவனுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் விழிப்படைந்திருப்பதை நீங்கள் கவனிக்கலாம். அது இவ்வாறாகவும் தோன்றலாம்

- வாழ்க்கையில் புதுப்பிக்கப்பட்ட உற்சாகம்;
- அனைவருக்கும் அதிக அன்பு, சேவை மற்றும் நல்லெண்ணத்தை வழங்குதல்;
- எக்கின் உட்புற மற்றும் வெளிப்புற சமூகத்துடன் நெருக்கமான ஒரு பந்தத்தை உணர்தல்.

எக்கின் உபதேசத்தைப் பெற்றவர்களில் சிலர் எக் மற்றும் மஹாரந்தா, வாழும் எக் சத்குருவின் மென்மையான அன்பையும் மற்றும் வழிகாட்டுதலையும் உடனடியாக உணர்கிறார்கள். மற்றவர்களுக்கு அது சற்றுத் தாமதமாகலாம்.

பொறுமையாய் இருங்கள். இங்கு அவசரம் இல்லை. இன்று நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து தொடங்குங்கள். உங்களின் ஆன்மீகப் பயணத்தில் மகிழுங்கள்.

## எனது அர்ப்பணிப்பு என்னவாக இருக்கும்?

மஹாரந்தா, வாழும் எக் சத்குருவின் வழிகாட்டுதலின்படி, தெய்வீக எக், தூய இறையாற்றலிடம் உங்கள் ஆன்மீக வாழ்க்கையை நீங்கள் அர்ப்பணிக்கிறீர்கள்.

இதன் விளைவாக, உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் மற்றும் சூழ்நிலைகளிலும் மறைந்திருக்கும் ஆன்மீக வாய்ப்புகளைப் பார்ப்பதற்கு மஹாரந்தா உங்களுக்கு உதவுகிறார்.

இந்த வாழ்க்கை இறைவனை அடையும் உங்களின் தனிப்பட்ட பாதையாகும்.

## எனது இரண்டாவது உபதேசத்தில் என் குடும்பத்தினரை நான் சேர்க்கக்கொள்ள முடியுமா?

மஹாந்தாவின் அன்பு உங்கள் குடும்பத்தையும் உள்ளடக்கியதாகும். உங்களுடன் இணைந்து வசிக்கும் குடும்ப உறுப்பினர்கள், எக்கங்காரின் உறுப்பினர்களாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், அவர்களையும் உங்களுடன் சேர்ந்து இரண்டாவது உபதேசத்தை எடுத்துக் கொள்ள நீங்கள் அழைக்கலாம்.

உங்கள் குழந்தைகள் (17 வயது வரை உள்ளவர்கள்) அவர்கள் சடங்கில் கலந்து கொண்டாலும் அல்லது கலந்து கொள்ளாவிட்டாலும், இரண்டாவது உபதேசத்தை உங்களுடன் சேர்ந்து அவர்களும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

அல்லது குடும்ப உறுப்பினர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு கவனிக்கலாம். மஹாந்தாவின் அன்பும், பாதுகாப்பும் அவர்களுக்கும் இருக்கும், அவர்கள் ஒவ்வொருவரையும் இறைவனிடம் நெருங்கி வரச் செய்யும்.

## நான் தயார் என்பதை எப்படி நான் அறிவேன்?

நீங்கள் ஆன்மீக ரீதியில் தயாராகும்போது உங்கள் இரண்டாவது உபதேசத்தைக் கோருவதற்கான இந்த அழைப்பு சத்குருவிடமிருந்து வருகிறது.

இந்தப் பரிசு வழங்கப்படுவதற்காகத் தயாராக உள்ளது மற்றும் நீங்கள் ஏற்றுக்கொள்வதற்காகக் காத்திருக்கிறது. உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப எப்போது வேண்டுமானாலும் நீங்கள் உபதேசத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

**எக்கங்கார்**
**ஆன்மீகச் சுதந்திரத்தின் பாதை**

Copyright © 2025 ECKANKAR. இந்த கையேடு *What Happens During the ECK Initiation?*
Copyright © 2018, 2023 ECKANKAR—இருந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டதாகும்.